ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2240/13 - 2021 අගෝස්තු මස 10 වැනි අඟහරුවාදා - 2021.08.10
*2240/13 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/ 1978* (X)(A)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய நான், மேற்சொல்லப்பட்ட பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும் 2016, திசெம்பர் 02 ஆந் திகதிய 1995/ 39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையை, அட்டவணை* I *இல் உள்ள "நிபந்தனைகள்" என்னும் தலைப்பின் கீழான உள்ளீடுகளை நீக்கவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவனவற்றை இடுவதன் மூலம் திருத்துகின்றேன்.*

"*எஸ்.எல்.ரி. கெம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் வழங்கப்படும் அட்டவணை* II *இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பட்ட நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடர்வதற்கு மாணவர் ஒருவரைச் சேர்ப்பதற்கான குறைந்த பட்ச நுழைவுத் தகைமைகள், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் பௌதீக விஞ்ஞானப் பாடத்துறையில் மூன்று (3) சாதாரண* (S) *சித்திகளாக அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் வழிகாட்டு நெறிகளுக்கு இணங்க சமமான தகைமையொன்றாகவிருத்தல் வேண்டும்.*

ஆயின் எவ்வாறாயினும், அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட இலத்திரனியல் மற்றும் வலுமுறைமைகளிலான பொறியியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி எனத் தலைப்பிடப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில், மேலே குறிப்பிடப்பட்ட குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு மேலதிகமாக, மாணவர் ஒருவர்-

(அ) தகைமையளிக்கும் பக்க உள்நுழைவு நிகழ்ச்சித் திட்டங்களில் ஒன்றை ; அத்துடன்

(ஆ) இயைபான பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் ஐந்தாம் அரையாண்டுப் பருவத்துக்கு முன்னர், அங்கீகரிக்கப்பட்ட திறமைச் சித்திகளை ஈட்டுவதற்கான ஏதேனும் இடைவெளியை நிரப்புவதற்குத் தேவைப்படுத்தப்பட்டவாறான எல்லாத் தொகுதிக் கூறுகளை,

வெற்றிகரமாக நிறைவு செய்திருப்பின், அத்தகைய மாணவர் முறையான நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடர்வதற்கு சேர்க்கப்படலாம் ; அது பின்வருமாறாகும் :-

**பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கான பக்க உள்நுழைவுத் தகைமைகள் மற்றும் இடைவெளி நிரப்பும் தொகுதிக் கூற்றுத் தேவைப்பாடுகள்**

| பட்ட நிகழ்ச்சித் திட்டம் | தகைமையளிக்கும் பக்க உள்நுழைவு நிகழ்ச்சித்திட்டம் | இடைவெளி நிரப்புவதற்காக வழங்கப்பட வேண்டிய தொகுதிக் கூறுகள் | | |
|---|---|---|---|---|
| | | தொகுதிக் கூற்றுத் தலைப்பு | திறமைச் சித்திகள் | தொகுதிக் கூற்றின் அரை யாண்டுப் பருவம் |
| (1) இலத்திரனியல் மற்றும் வலு முறைகளிலான பொறியியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி | • கட்டுநாயக்க தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் (ஐ. ஈ. ரி.) வலு பொறியியல் துறையில் பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (என்டிஈஎஸ்) ; அல்லது | EE2101 சமிக்ஞைகள் மற்றும் முறைமைகள் | 3 | S3 |
| | | EM2201 கருத்திட்ட முகாமைத்துவம் | 2 | S4 |
| | • மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் (ஐரியூஎம்) மின் பொறியியல் தொழில்நுட்பவியல் துறையில் தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா (என்டிரி) ; அல்லது | EE1201 மின்சுற்றுப் பகுப்பாய்வு II | 3 | S2 |
| | | EE2103 எண்ணிம இலத்திரனியல் III | 3 | S3 |
| | | EE2101 சமிக்ஞைகள் மற்றும் முறைமைகள் | 3 | S3 |
| | | EE2202 ஒப்புமை இலத்திரனியல் III | 3 | S4 |
| | | TE2201 தொடர்பாடல் முறைமைகள் | 3 | S4 |
| | | CE2201 மென்பொருள் பொறியியல் | 3 | S4 |
| | | EM2201 கருத்திட்ட முகாமைத்துவம் | 2 | S4 |
| | • பொறியியல் கல்லூரி, இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனத்தில் (ஐஈஎஸ்எல்சிஈ) மின் பொறியியலில் பட்டதாரி டிப்ளோமா | EE2101 மின்சுற்றுப் பகுப்பாய்வு II | 3 | S2 |
| | | EE2103 எண்ணிம இலத்திரனியல் III | 3 | S3 |
| | | EE2202 ஒப்புமை இலத்திரனியல் III | 3 | S4 |
| | | EM2201 கருத்திட்ட முகாமைத்துவம் | 2 | S4 |

| பட்ட நிகழ்ச்சித் திட்டம் | தகைமையளிக்கும் பக்க உள்நுழைவு நிகழ்ச்சித்திட்டம் | இடைவெளி நிரப்புவதற்காக வழங்கப்பட வேண்டிய தொகுதிக் கூறுகள் | | |
|---|---|---|---|---|
| | | தொகுதிக் கூற்றுத் தலைப்பு | திறமைச் சித்திகள் | தொகுதிக் கூற்றின் அரை யாண்டுப் பருவம் |
| (2) இலத்திரனியல் மற்றும் தொலைத் தொடர்புகளிலான பொறியியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி | • கட்டுநாயக்க தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் (ஐ. ஈ. ரி.) மின், இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் பொறியியல் துறையில் பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா (என்டிஈஎஸ்) ; அல்லது | சமிக்ஞைகள் மற்றும் முறைமைகள் | 3 | S3 |
| | | எண்ணிம இலத்திரனியல் III | 3 | S3 |
| | | கருத்திட்ட முகாமைத்துவம் | 2 | S4 |
| | • மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் (ஐரியூஎம்) இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பாடல் பொறியியல் தொழில்நுட்பவியல் துறையில் தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா (என்டிரி) ; அல்லது | மின்சுற்றுப் பகுப்பாய்வு II | 3 | S2 |
| | | எண்ணிம இலத்திரனியல் III | 3 | S3 |
| | | ஒப்புமை இலத்திரனியல் III | 3 | S4 |
| | | சமிக்ஞைகள் மற்றும் முறைமைகள் | 3 | S3 |
| | | கருத்திட்ட முகாமைத்துவம் | 2 | S4 |
| | • பொறியியல் கல்லூரி, இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனத்தில் (ஈஎஸ்எல்சிஈ) இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பாடலில் பட்டதாரி டிப்ளோமா | மின்சுற்றுப் பகுப்பாய்வு II | 3 | S2 |
| | | எண்ணிம இலத்திரனியல் III | 3 | S3 |
| | | ஒப்புமை இலத்திரனியல் III | 3 | S4 |
| | | கருத்திட்ட முகாமைத்துவம் | 2 | S4 |

**பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ்,**
*கல்வி அமைச்சர்.*

கொழும்பு,
*2021, ஓகத்து 03.*

*08-364*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.